# அறத்தொடு நிற்றலில் அலரும் அம்பலும்

## Charity - Alar and Ambal

**Dr. S. Deepalakshmi**
Assistant Professor of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women (Autonomous), Perambalur - 12, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0400-2068

**ABSTRACT**

Altruism is a primary convention in substantive grammar. The friend who wants to stabilize the life of the elders in the way of charity is the fact that the leader and the leader are in love without the knowledge of others. Thus the love of the leader will be successful. Efforts will be made to hold the wedding ceremony.
The purpose of almsgiving is to stabilize the love life of the leader and to make the life of chastity blossom. In short, it is Aruncheyale - Aracheyale - Charitable giving. In this section, he explained the ability of leaders, friends, nurses, etc., who appear in the internal grammar, to work to establish virtue. It is mentioned in Peragarati that Ambal means the secret love between the leader and the girl is known and blamed by many people and Alar means that only a few people know and shun it. It is also possible to know that the Ambal and Alar of those days were spoken for the sake of good, unlike the whispers spoken today.

**Keywords:** Sangam Literature, Culture, Virtue, Looking for a leader, Emphasis on domesticity, Sadness of the leader, Character of a leader.

**ஆய்வுச்சுருக்கம்**

*அகப்பொருள் இலக்கணத்தில் அறத்தொடு நிற்றல் என்பது முதன்மையானதொரு மரபு ஆகும். தலைமக்களின் வாழ்வை அறவழியில் நிலைப்படுத்த விரும்பும் தோழி முதலானோர் தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் காதல் கொண்ட உண்மையை உரியவர்க்கு உரியவாறு எடுத்துரைப்பது அறத்தொடு நிற்றல் ஆகும். இதனால் தலைவன் தலைவியின் காதல் வெற்றி பெறும். திருமண நிகழ்ச்சி நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பெறும்.*

*தலைவன் தலைவியின் அன்பு கலந்த காதல் வாழ்க்கையை நிலைபெறச் செய்து கற்பு வாழ்வை மலரச் செய்வதே அறத்தொடு நிற்றலின் பயன் ஆகிறது. சுருங்கச் சொன்னால் களவைக் கற்பாக்கும் அருஞ்செயலே - அறச்செயலே - அறத்தொடு நிற்றல். அகப்பொருள் இலக்கணத்தில் இடம்பெறும் தலைவி, தோழி, செவிலி முதலானோர் அவ்வாறு அறம் நிலைநிறுத்தச் செயல்படும் திறத்தை இப்பகுதியில் விளக்கியுள்ளார். அம்பல் என்றால் தலைவனும் தலைவியும் கொண்ட களவுக் காதலை பலரும் அறிந்து, பழித்துக் கூறல் என்றும், அலர் என்பது சிலர் மட்டுமே அறிந்து புறங்கூறுதல் என்றும் பேரகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய அம்பலும் அலரும் இன்று பேசப்படும் கிசுகிசுக்களைப் போலன்றி, நன்மையின் நிமித்தமாகவே பேசப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.*

**கலைச்சொற்கள்:** சங்க இலக்கியம், பண்பாடு, அறம், தலைவி வேட்கை, இல்லறம் வலியுறுத்துதல், தலைவியின் வருத்தம், தலைவனின் பண்பு.

**முன்னுரை**

சங்க இலக்கியம்  நம் முன்னோர்களின் வாழ்க்கை வரலாற்றை நம் கண் முன்னே காட்டும் காலக்கண்ணாடி சங்க இலக்கியமாகும். அவற்றில் களவு, கற்பு வாழ்வை அகம் என்றும் வீரம், மன்னனின் பண்பு, கொடை, போர் செய்திகளை சொல்வது புறம் என்றும் வரையறுத்துள்ளனர். அவற்றில் களவிலிருந்து மட்டுமே கற்பு வாழ்விற்கு சென்றுள்ளனர். அப்படி களவு வாழ்வைக் கற்பாக மாற்றுவதற் பெரிதும் துணையாக அமைவது அம்பல் மற்றும் அலராகும். வள்ளுவர்

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

அலர்க்கு ஒரு தனி அதிகாரத்தையே உருவாக்கியுள்ளார். அம்பல் என்பது தலைவன் தலைவி காதல் கொண்டு ஒழுகும் செய்தி சிலருக்கு மட்டும் தெரிந்தால் அது அம்பல் எனப்படும். பலர் அறிந்தால் அதற்கு பெயர் அலர் எனப்படும். இன்றைய சமுதாயத்தில் புரளி பேசுவதையே அம்பல்இ அலர் என்றழைக்கின்றனர். களவிலிருந்து கற்பு வாழ்விற்கு செல்ல இந்த உத்திகளையே தலைவியும் தோழியும் பயன்படுத்தியுள்ளனர். இவற்றில் அறத்தொடு நிற்றலில் அம்பலும் அலரும் எவ்வாறு துணை நிற்கின்றது என்பதை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**அறத்தொடு நிற்றலின் வகை**

களவு வாழ்வின் இன்றியமையாத ஒள்றாக விளங்குவது அறத்தொடு நிற்றலாகும். தலைவியின் களவு வாழ்க்கையை அடுத்தவர்க்கு எடுத்துரைக்கும் பாலமாக விளங்கும் அறத்தொடு நிற்றல் இருவகைப்பட்டதாய் அமைகிறது. 'முன்னிலை மொழி' அதாவது முன் நிற்பார்க்கு நேரே கூறுதல். 'முன்னிலைப் புறமொழி' என்பது முன் நிற்பார்க்குக் கூற வேண்டிய செய்தியைப் பிறருக்குக் கூறுவார் போலக் கூறுதல். சங்க அகஇலக்கியத்தில் களவின் வழியாக கற்பு வாழ்விற்கு செல்கின்றனர். இதற்கு அலர் எனும் பண்பு மூலக்கூறாக அமைகின்றது. அவை அறத்தொடு நிற்றலின் ஒரு பங்காகிறது.

**அலரும் அம்பலும்**

தலைவன், தலைவி ,ருவருக்குமிடையே காதல் உறவானது யாருக்கும் தெரியாமல் நடக்கும் என்பதே பண்டைத் தமிழரின் அகமரபாகும். வெளிப்பட வரைவுகடாதல் என்பது தோழி தலைவனிடம் அவர்கள் களவொழுக்கம் யாரால் அறியப்பெற்றது. முதலில் அம்பலாக முளைத்துப் பின் அலராக வளர்ந்தது என்று கூறி இனி வரைந்து கொள்வதில் காலம் தாழ்த்துதல் நல்லதல்ல என்று வெளிப்படையாகவே தோழி கூறுவாள். தலைவன், தலைவியருக்கிடையேயான களவுக் காதல் படிப்படியாக வெளித் தெரிந்து விடும். அவ்வாறு களவு வெளிப்படுவதற்குத் தலைவனே காரணமென்பதைப் பற்றி தொல்காப்பியர்,

> **"அம்பலும் அலரும் களவுவெளிப் படுதலின்**
> **அங்கதன் முதல்வன் கிழவனாகும்" (தொல்.களவு.49)**

என அலர் வெளிப்படுவது தலைவனை வைத்தே என்பதை தொல்காப்பியர் இங்கு நயம்பட எடுத்துரைக்கின்றார்.

சங்க இலக்கியத்தில் பண்பாட்டையும் வீரத்தையும் தனது இருகண்களாகப் போற்றி வாழ்ந்து வந்தனர். களவுலிருந்தே கற்பு வாழ்விற்கு சென்றனர். இதனை தமது பண்பாட்டு கூற்றில் ஒன்றாக கண்டனர்.இவற்றில் களவில் நீட்டிக்காமல் கற்பு வாழ்விற்கு விரைவில் திரும்புக என்னும் நோக்கில் தோழி சூழலை விளக்கி மணம் புரியுமாறு தலைவனைத் வேண்டுவது வரைவு கடாதல் எனப்படும். களவைக் கற்பாக்கத் தோழி எடுக்கும் முன்னேற்பாடு, தோழி வரைவு கடாவும் சூழலைத் தொல்காப்பியர் பின்வருமாறு வரையறுப்பதாக ஆ. இராமக்கிருட்டிணன் பின்வருமாறு கூறுகின்றார். களவைக் கற்பாக்கும் பங்கில் தோழியே முதன்மையான இடம் வகிக்கின்றார். அதற்கான சூழலையும் அவரே கொடுக்கின்றார்.

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

1. இற்செறிப்புக் கடுமையால் தலைவியின் காதல் மிகும் சூழல்.
2. தலைவனின் ஆற்றாமை அறிந்து தலைவி கலங்கும் சூழல்.
3. தலைவனது நாடு, ஊர், இல், குடி, பிறப்பு, சிறப்பு ஆகியன கூறி தோழி உணரவேண்டும் சூழல்.

இவற்றுள் முதலிரண்டு வரைவு கடாதல் என்னும் சூழலைச் சுட்டுவன் இறுதி வரைவு மேற்கொள்ளும் முறை சுட்டுவது என்று விளக்கம் தருகின்றார். வரைவு என்பது திருமணத்தைக் குறிப்பதாகும். இதனை ஆசிரியர் வரைவுக்கு முன்பு நடப்பதையும் பின்பு நடப்பதையும் சுட்டுகிறார்.

**பழிச் சொல்லை நீக்குதல்**

களவை நீட்டிக்கும் தலைவனைத் தோழி வரைவு கடாது மேற்கொள்ளும் உத்திகளுள் ஒன்று அலர் என்ற பழிச்சொல்லாகும். தோழி தலைவனிடம் நேராக வரைவு கடாவும் பாடல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. இவ்வரைவு கடாதலைத் தொல்காப்பியர் இருவகையினால் நடைபெறுகிறது என்கிறார்.

**“அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தமைக்கு மென்று**
**அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்”**

களவொழுக்கத்தை அம்பல், அலர் இரண்டும் வெளிப்படுத்துகிறது என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றர். தெய்வப்புலவரான வள்ளுவரும் அம்பல் அலர் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றார்.

**“அலர்எழு ஆருயிர் நிற்கும் அதனைப்**
**பலர்அறியார் பாக்கியத் தால்”**

எம் காதலைப் பற்றி அலர் எழுவதால் அரிய உயிர் போகாமல் நிற்கின்றது. ஈடு நல்வினைப் பயனால் அதனைப் பலரும் அறியாமலிருக்கின்றனர் என்று தலைவன் தோழியிடம் கூறுவதாகக் குறள் கூறுகின்றது. இவ்வாறு அலர், அம்பலின் நிலையை தலைவன் வலியாக திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

**முகிழ்நிலையும், முதிர்நிலையும்**

களவு வாழ்வில் அலர் அம்பல் இரண்டும் காதலரின் மறை ஒழுக்கம் குறித்து ஊரவர் சொல்லும் பழிச்சொல் மூவகைப்படும். அம்பல் என்பது ஒருவருக்கொருவர் மறைமுகமாகக் சைகைவழி தூற்றும் பழி. அலர் என்பது ஒருவருக்கொருவர் சொல் வழியே மறைமுகமாகத் தூற்றும் பழிச்சொல். கௌவை என்பது ஒருவருக்கொருவர் வெளிப்படையாகத் தூற்றும் பழிச்சொல். அம்பல் என்பது அலரின் முகிழ்நிலை. கௌவை என்பது அலரின் முதிர்நிலை.

“முகிழ்த்தல் சொல் நிகழ்தல், இல்அறிதல், அமில் அறிதல்,சேரி அறிதல், ஊர் அறிதல், நாடு அறிதல், தேசம் அறிதல் என அலரின் படிநிலையை இறையனார் அகப்பொருள் விளக்குகிறது”

“களவும் கற்பும் அலர் வரைவ இன்றே “

எனத் தொல்காப்பியம் களவு, கற்பு ஒழுக்கங்களில் அலரின் இடத்தைக் கூறுகிறது. ஆயினும் இரு ஒழுக்கங்களிலும் அலரின் நிலை வேறுபடுகிறது.

“பாஅடி உரல பகுவாய் வள்ளை
எதில் மாக்கள் நுவலும் நவல்ப

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

அழியது எவன்கொல், இயபேதை ஊர்க்கே!
பெரும்பூண் பொறையன் போம்முதிர் கொல்ளிக்
கருங்கட் தெய்வம் குடவழை எழுதிய
நல்இயல் பாவை அன்னஇய்
மெல்இயல் குறுமகள் பாடினன் குறினே"

**தோழி இடித்துரைத்தல்**

தலைவி, வள்ளைப்பாட்டில், தன்னுடைய கவலையை கூறி தலைவனின் பெயரை குறையாக கூறுகிறாள். இதனை அறிந்தவர்கள் தலைவியையும் தலைவனையும் அலர் தூற்றுகின்றனர். தலைவன் சிறைப்புறமாக வந்து நின்றபோது, தோழி தலைவிக்குக் கூறுவதைப் போல அவனை வரைந்து கொள்ள வேண்டுதல் இவ்வள்ளைப்பாட்டின் நோக்கமாகும்.

களவில் தலைவன் தலைவி இருவருமே தொடர்புடையினும் தூற்றப்படுபவள் தலைவி மட்டுமே. தலைவன் அல்ல. தூற்றுவரும் மகளிரே! தூற்றப்படுபவரும் மகளிரே, களவில் அவரைப் பொறுத்தவரை அது மகளிருக்கு உரியதாகவே அமைகிறது" என்று இராஜகோபாலன் குறிப்பிடுவது இதனை உறுதிப்படுத்தும்.

களவில் தலைவன் வருத்தமாயிருப்பதாலும், தாய் அறிய வாய்ப்பு ஏற்படுவதாலும், இற்செறிப்பு நிகழ்வதாலும் தலைவியாலும் தோழியாலும் நடைமுறையில் அலர் வெறுக்கப்படுகிறது. உளவியல் அடிப்படையிலும் இது வெறுக்கப்படுகிறது. அலர் தூற்றும் மகளிரை,

"அலர் வாய்ப்பெண்டிர் அம்பலொடு ஒன்றி
புரை இல்தீமொழி பயிற்றிய உரை எடுத்து"

என்று நற்றிணையும்,

"இலங்குதிரைப் பெருங்கற்கு எல்லை தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சி"

என்று குறுந்தொகையும் கூறுகின்றது. இக்காலத்தே 'புறன்கூறல்' என்றுரைக்கும் பொருளோடு ஒத்தது இது.

**இரு நிலத்திற்குரிய இயல்பு**

"அலர், குறிஞ்சி, நெய்தல் ஆகிய இரு நிலத்திற்கும் உரியதாயினும் நெய்தல் திணையில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது". குறிஞ்சியில் தலைவன் யாரும் அறியா இரவில் நடந்து வருதலால் அலரெழ வாய்ப்பில்லை. தலைவன் பலரும் காண பகலில் வருதல் குறித்துக் குறுந்தொகை பாடல் கூறுகின்றது.

"கடல் உடன் ஆடியும் கானல் அல்கியும்,
தொடலை ஆயமொடு தழூஉ அணி அயர்ந்தும்
நொது மலர் போலக் கதுமென வந்து
முயங்கினான் செலினே, அலர்ந்தன்று மன்னே
துத்திப் பாந்தள் பைத்து அகல் அல்குல்
திருந்து இழைத் துயல்வுக் கோட்டு அசைத்த பசுங்குழைத்
தழையினும், உழையின் போகான்
தான் தந்தனன் யாய் காத்து: ஓம்பலே"

தலைவனின் களவொழுக்கத்தின் வருகை, அலரைத் தோற்றுவித்தால் இற்செறிப்பிற்கு ஏதுவாயிற்று எனத் தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"நல்அரை முழுமுதல் அவ் வயன் தொடுத்த
தூங்கல் அம்பித் தூவல் அம் சேர்ப்பின்

கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு
நெடுநெறி ஒழுகை நிரை செலப் பார்ப்போர்
அளம் போகு ஆகுலம் கடுப்ப,
கௌவை ஆகின்றது. ஐய! நின் நட்பே”

**நட்புக்குரிய உவமை**

உப்பு வண்டிகளைச் செலுத்தும் உமணர் உப்பளத்து வெளிகளே வண்டிகளை உசுப்பி ஓட்டும் பேரொலியைப் போல உன்னோடு எமக்கு உண்டான நட்பு இவ்வூரிடத்து அலராகப் பெருகிற்று என்று அலரின் செயல் கூறப்படுகின்றது.

அலர் கூறல் சில விளைவுகளுக்குக் காரணமாதலைச் சுட்டிக்காட்டி தோழி வரைவு கடாவுகிறாள். தலைவியின் புறநலனழிதல். அக நலனழிவுக்கு. அதாவது நாண் அழிவுக்குக் காரணமாதல், அன்னை அலைத்தல், அன்னை அறிந்து இற்செறித்தல், தலைவனைக் காணமுடியாமல் அவன் வரவைத் தடைசெய்தல் போன்றவையாகும். தலைவன் சிறைப்புறமாகத் தலைவியிடம் உரையாடும் போக்கில் அலரைப் பற்றிய பாடல்கள் காணப்படுகின்றன. கலித்தொகையில் மட்டும் தலைவனிடம் நேராகவே இச்செயல் கூறப்படுகிறது. அலர் தோற்றத்திற்குத் தலைவனையே காரணமாக்கி அலர் தூற்றலால், தலைவி துன்பநிலை கூறுதல். அலர் விளைவால் தலைவியின் நலனழிவு. இற்செறிப்பு, தலைவனைக் காண முடியாநிலை ஆகிய விளைபயன்களையும் கூறித் தலைவனை வரைவு கடாவுகிறாள் தோழி.

**இற்செறிப்பை உணர்த்துதல்**

அலரெழுந்ததால் தாய் தலைவியை இற்செறித்தனன் என்று கூறி இனி அவளைக் காணமுடியாது, வரைதலே நலம் எனக் குறிப்பாக அறிவுறுத்துகிறாள். அலரெழக் காரணம் நீதான் எனத் தலைவனையே அறிவுறுத்துகின்றாள். இவ்வாறு. அலரெழக் காரணம் நீதான் எனத் அவனையே காரணமாக்கியும் இற்செறிப்பு உணர்த்தப்படுகிறது.

**தோன்றாத் துணையாகிய தோழி**

தலைவனை வரைந்து கொள்ளுமாறு தோழி பலபடியாக வேண்டியும், அவன் அங்ஙனம் செய்யாது களவொழுக்கத்திலேயே நோக்கமுடையவனாக இருப்பான். இந்நிலையில் தலைவிக்கு ஆற்றாமை கைமிக்கு, ஏதம் பலவாக வந்து சேரும்; இப்பொழுது அவளுக்குத் தோன்றாத் துணையாக இருக்கும் தோழி இனி இக்களவினைத் தமர்க்கு வெளிப்படச் செய்து, அலரால் குறித்த தலைவனுக்கே கொடுக்கச் செய்தல் தக்கது என்று உளங்கொண்டு அவர்கட்குக் களவொழுக்கத்தை மெல்ல வெளிப்படுத்தத் தொடங்குவாள். இங்ஙனம் வெளிப்படுத்துதலையே அறத்தொடு நிற்றல் என்பர். மரபு மீறாத, அறத்துடன் கூடிய செயலாகும் இது.

**அறத்தொடு நிற்றலின் எழுவகை நிலைகள்**

அறத்தொடு நிற்றல் ஏழு பகுதிகளாக நடைபெறும் என்பர் தொல்காப்பியர்.

“எளித்தல், ஏத்தல் வேட்கை உரைத்தல்
கூறுதலுசா அதல் ஏதீடு. தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ் எழுவகையே என்மனார் புலவர்”

என்பது அந்நூற்பா. இதுபோன்று இப்பகுதிகளில் அறத்தொடு நிற்றல் நடைபெறும். அறத்தொடு நிற்றல் எந்தெந்தச் சூழ்நிலைகளில் நடைபெறும் என்பதை இறையனார் களவியல் ஆசிரியர் தொகுத்துக் கூறுவர்.

“காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்

வரைவெதிர் கொள்ளாது தமர் அவண் மறுப்பினும்
அவன் ஊறு அஞ்சும் காலம் ஆயினும்
அந்நாள் இடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே " என்று குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

**பிற மக்கள் திருமணம் பேச வருதல்**

தலைவியின் களவொழுக்கத்தைக் கண்ட பெற்றோர் அவரை இற்செறிக்கும் போது. பிறர் தலைவியை மணம் பேச வருங்காலத்தினும் தலைமகனுடைய பெற்றோர் பரிசத்தோடு தலைவியை வரைவதற்கு வரும்போது தலைவியின் பெற்றோர் பரிசம் குறைவு என்று கூறியோ, பிறவாறோ மணத்தை மறுத்த போதும்,தலைவன் இரவுக்காலத்தில் தலைவியைத் தேடி வருங்கால் அவனுக்கு பானை, பாம்பு, புலி முதலியவற்றால் துன்பம் நேரும் என்று எண்ணித் தலைவி வருந்தும் போதும் தோழி அறத்தொடு நிற்பாள். தலைவியை அயலார் மணம் பேச வருதலை விளக்கும் பாடல் பின்வருமாறு:

"இன்று யாண்டையனோ தோழி! குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண் அகன் தூமணி பெறூஉம் நாடன்
அறிவு காழ்க் கொள்ளும் அளவை, செறிதொடி
பொம்மல் ஓதி நீவியானே!"

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவியை அயலார் மணம் பேச வந்த இடத்து தோழி, செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்றலைக் காணலாம்.

"தோழியும் அறியாது மறைந்தொழுகிய தலைவி தன் களவை அவளுக்குக் கூறி அறத்தொடு நிற்பாள். பின்னர்த் தோழி தன் தாயாகிய செவிலிக்கும். செவிலி தலைவியின் தாயான நற்றாய்க்கும் களவைக் கூறுவர். இதுவே வயதுக்கும் உறவுக்கும் ஒத்த முறையாகும் என்ற வ.சுப. மாணிக்கனாரின் கருத்து இங்கு நினையத்தக்கது. தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தி, எல்லை மீறாத இல்லறத்தை வலியுறுத்தும் தோழியின் பணி அறப்பணியாகும்.

**அறிவுத்திறன் வழி அறத்தொடு நிற்றல்**

தோழி தன்னுடைய அறிவுத்திறன் முழுவதையும் பயன்படுத்திச் செயற்படுவதற்குரிய பருவம் இது. அறத்தொடு நிற்றல் பயன் தருமா? உடன்போக்கே வேண்டப்படுவதா? எனத் தலைவியின் தாய் தந்தையர் மனப்பான்மையையும், தலைவன் எண்ணத்தையும், பிறவற்றையும் செவ்வனே சீர்தூக்கிப் பார்க்கும் திறன் தோழிக்கு வேண்டப்படுவது இந்நிலையிலேயே" க. இரத்தினம் கூறுகின்றார்.

**தோழியின் நேர்நின்ற துலாக்கோல் பணி**

அறத்தொடு நிற்றல் என்னும் துறையால் தோழியின் பேச்சாற்றலும் அதனைப் புலப்படுத்தும் புலவர்களின் கற்பனைத் திறமும் சொல்வளமும் அற்புதமாகப் பொலிவதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது" என்கிறார் ம.ரா. போ. குருசாமி.

**நல்லறம் வழி இல்லறம் வலியுறுத்தும் மாண்பு**

தோழி மூலம் தலைவியின் களவொழுக்கத்தை அறியும் செவிலி. நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். இவ்வாறு தலைவி, தோழி, செவிலி மற்றும் நற்றாய், அறத்தொடு நிற்கும் செய்தியைக் காமக் கடும்புனல் என்று குறிஞ்சிக்கலி கூறுகின்றது.

'இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇ
கோட்சுறா எறிந்தென சுருங்கிய நரம்பின்
முடிமதிர் பரதவர் மட மொழிக் குறுமகள்,

வலையும், தூண்டிலும் பற்றி பெருங்கால்
திரை எழு பௌவம் முன்னிய
கொலை வெஞ்சிறாஅர் பாற்பட்டனளே''

தலைவியை மணம் முடிக்க அயலார் வருவதறிந்த தோழி செவிலியிடம் அறத்தொடு நின்றாள். தலைவியை வருத்தாத முருகன், தரும்பலியை உண்பானோ அல்லது இவளை வருத்திய சிலம்பன் அப்பலியை உண்பானோ எனத் தோழி ஐயத்துடன் அறத்தொடு நின்று தலைவிக்குத் தலைவனோடு உள்ள தொடர்பினை உணர்த்தினாள்.

நற்றாயையும், செவிலித்தாயையும் சினங்கொள்ள விடாமல், மனத்தைச் சமப்படுத்தித் தலைவிக்குத் துணை நிற்கும் தோழியின் உயர்பணி போற்றற்குரியது. தலைவியின் நல்வாழ்வில் தோழி கொண்ட நல்லெண்ண அடிப்படையிலான இப்பணியே, தலைவன் தலைவியின் நடத்தை நெறிமுறையில் முன்னிற்கிறது.

"சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி
ஏதில் வேலன்" என்று அகநானூறு கூறுகின்றது.

**நடத்தையில் வேறுபாடு புலப்படுதல்**

தலைவியின் செய்கையில் வேறுபாடுகள் புலப்படுவது போலவே தாய்மார்க்கும் புலப்படும். அவர்கள் வருத்தி உண்மை அறியாமையால் அந்நோட்டந் தெரியாமல், பிறரை வினவுவர். அதற்கு முன்னதாக அவளிடம்

அணுக்கமாய் நிற்கும் என்னை வினவக்கூடும். அங்ஙனம் வினவுங்கால் யான் தாய்க்கு மறுமொழி பகரும் கடமையில் உள்ளேன். நான் என் சொல்வேன்" என ஆராய்ந்து கொண்டிருக்கும்பொழுது. செவிலியும் தலைவியின் உடல். செயல் வேறுபாட்டின் காரணம் யாதோ என்று வினவுவாள் அல்லது வெறியாடும் வேலனை வினவுவாள். இப்போது தோழி வெளிப்படையாக உரைக்காது கட்டுவிச்சிக்கு உரைப்பது போல உரைப்பாள். இசைதத்தான் 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' என்று கூறுவர் இலக்கண ஆசிரியர்.

**அறம் வழுவாது நிற்கும் தலைவன்**

களவு காலத்தில் தலைவன் தலைவிக்கு சிறந்த பணிவிடைகளைச் செய்கிறான். கற்பு காலத்தில் சிறந்தவாறு தலைவியைப் பார்த்துக் கொள்வான் என்பது தெளிகிறது. ஒருவருக்கொருவர் எந்தவொரு சூழலிலும் விட்டுக்கொடுக்காமல் வாழ்தல் என்பதையே அறத்தொடு நிற்றல் உணர்த்துகிறது என்பதை தொல்காப்பியர் களவியலில் உணர்த்துகிறார். அதனால் தோழியின் கூற்றுக்களை எல்லாம் தொகுத்துக் கூறுவர்.

"முன்னிலை அறனெனப் படுதலென்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்"

என்ற பகுதியினால் இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். நச்சினார்க்கினியர் அறன் எனப்படுதல் இருவகைப்புரை முன்னிலை என்று கிளவி தாயிடைப் என்று புகுப்பினும் உரைநடைப்படுத்தி அறன் என்று சொல்லப்படுந்தன்மை இருவர் கண்ணும் குற்றம் தீர்ந்த எதிர்ப்பாடு என்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்தும் செலுத்தினும் என்று உரை கூறுகிறாள்.

**அறத்தொடு நிற்கும் அன்புநிலை**

"இற்செறிப்பு, ஊரலர், வெறியாட்டு, நொதுமலர் வரைவு என்ற இந்த சூழலில் இருந்து தாண்டி வருவதற்கான முறையாக, ஒன்று அறத்தொடு நிற்றல்: மற்றொன்று உடன் போகுதல் இவற்றில் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. அறத்தொடு நின்ற பின் உடன் போகார். உடன் போனபின் அறத்தொடு நிற்பதால் பலனில்லை. அறத்தொடு நிற்றல், உடன்போதல் என்ற இரண்டினுள் ஒன்றே களவு நாடகத்தின் இறுதிக்காட்சியாக அமையும் என்று சரளா இராசகோபாலன் கூறுவதிலிருந்து களவு வாழ்க்கையில் உடன்போக்கு அல்லது திருமணமே இறுதியாக அமைந்துள்ளது என்பதை உணரமுடிகிறது. இதனால், பழந்தமிழர் வாழ்வின் பண்பட்ட நிலையை உணரமுடிகிறது.

**முடிவுரை**

அம்பல் என்பது ஆரம்ப நிலையென்றும் அலர் என்பதை முதிர்ந்த நிலையென்றும் கூறலாம். காதல் எப்பொழுது அம்பலாக மாறுகிறதோ அப்பொழுது அது நன்மையில் முடியும் என்ற கருத்தும் இருந்துள்ளது. அம்பலும் அலரும் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அவை சங்க காலந்தொட்டே நிகழ்ந்து வந்திருக்கின்றன என்பதை பல இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அன்று நிகழ்ந்த ஊர்வம்பு பேசுதலை, 'அம்பல்' என்றும் 'அலர்' என்றும் அக்கால மக்கள் வழங்கி வந்தனர்.

காதல் எப்பொழுது அம்பலாக மாறுகிறதோ அப்பொழுது அது நன்மையில் முடியும் என்ற கருத்தும் இருந்துள்ளது. அம்பலுக்கு உவமை கூறும் போது ஒலி குறைவாக கேட்க கூடிய கோழி,நாரை போன்றவற்றின் சத்ததையும், அலருக்கு உவமை கூறுமிடத்து எங்கும் பரவிக்காணக்கூடிய சூரியனின் ஒளி,காட்டுத்தீ, அதிர்ந்து கேட்க கூடிய முரசின் ஒலி, களிற்றின் ஆரவாரம்,வீரர்கள் ஆரவாரம்,அருவியின் ஓசை, பறையோசை, போர்கள் ஆரவாரம் போன்றவற்றை உவமையாக கூறுவதாலும் அம்பல் என்பது சிலர் அறிந்த செய்தியாகவும் அலர் என்பது பலர் அறியக்கூடிய செய்தியாகவும் சங்க இலக்கியத்தில் ஆட்சிப்பெற்றுள்ளதை அறியலாம். நம்முன்னோரின் சொல்லாட்சித்திறத்தையும் எண்ணிவியக்கலாம்.

அலர் அம்பலை இலக்கியங்களும் ஆதரிக்க செய்கின்றன. அம்பல் என்றால் தலைவனும் தலைவியும் கொண்ட களவுக் காதலை பலரும் அறிந்து, பழித்துக் கூறல் என்றும், அலர் என்பது சிலர் மட்டுமே அறிந்து புறங்கூறுதல் என்று குறிப்பிடப்படுகிறது. அன்றைய அம்பலும் அலரும் இன்று பேசப்படும் கிசுகிசுக்களைப் போலன்றி, நன்மையின் நிமித்தமாகவே பேசப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.